# நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை

## வருடாந்த அறிக்கை

## 2015

# வருடாந்த அறிக்கை

# 2015.01.01 தொடக்கம் 2015.12.31 வரை

## உள்ளடக்கம்


| | பக்க இலக்கம். |
|---|---|
| 1. முகப்பு வாசகம் | 1 |
| 2. நோக்கம் | 1 |
| 3. குறிக்கோள் | 1 |
| 4. நிருவாகமேன்முறையீடுகள் நியாயசபையின் நியமனம் | 1 |
| 5. தத்துவங்கள் | 1 |
| 6. மேன்முறையீடொன்று முன்வைத்தல் | 2 |
| 7. மேன்முறையீடொன்று முன்வைக்கப்பட்ட பின்னைய நடவடிக்கைமுறை | 2 |
| 8. காலவரையறை | 2 |
| 9. நியாயச் சபையின் தீர்ப்பு | 2 |
| 10. வேலைத்திட்டம் | 3 |
| 11. முன்வைக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகளின் உள்ளடக்கம் | 4 |
| 12. மேன்முறையீடுகள் தொடர்பான புள்ளிவிபரங்கள் 2015 | 4 |
| 13. 2015 ஆம் ஆண்டில் இறுதி முறையீடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிபுகள் | 5 |
| 14. முடிபு/ தீர்ப்பு வழங்குவதில் காணப்படும் பிரச்சினை | 5 |
| 15. நிதி ஏற்பாடுகள் 2016 | 5-6 |
| 16. பணியாட்கள் | 6-7 |
| 17. நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை காரியாலயம் | 7 |
| 18. நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை காரியாலயம | 8 |

**2015.01.01 ஆந் திகதி தொடக்கம் 2015.12.31 ஆந் திகதி வரையான <u>காலப் பிரிவிற்கான நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை பற்றிய வருடாந்த அறிக்கை</u>**

**1 .முகப்பு வாசகம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் 17வதுஅரசியலமைப்பு சீர்த்திருத்தத்தில் மறுசீர்த்திருத்த அரசியலமைப்பின் 59 (1) ஆம் உறுப்புரையின் படி 2002 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க , நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை தாபிக்கப்பட்டுள்ளது.

**2. நோக்கம்**

நிருவாகத்துடனான நேர்மைத்தன்மையை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான நட்புறவுடனான மற்றும் முதன்மையான நிருவனமாக செயற்ப்படுதல்.

**3. குறிக்கோள்**

இலங்கைச்சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் ixஆம் அத்தியாயத்தில் வழங்கப்பட்டுள்ளதன் தத்துவங்களைப் பிரயோகித்து அரச அலுவலர்களின் மற்றும் பொலிஸ் அலுவலர் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குவினால் எடுக்கப்படும் முடிபு மற்றும் கட்டளை தொடர்பாக மனிதாபிமான மற்றும் சுதந்திரமான ஆய்வை மேற்க்கொண்டு நிருவாகத்துடனான நியாயத்தன்மையை ஏற்படுத்திக்கொடுத்தல்.

**4.நிருவாகமேன்முறையீடுகள் நியாயசபையின் நியமனம்**

அச்சட்டத்தில் 2ம் பிரிவின் கீழ் காணப்படும் தத்துவங்களுக்கு இணங்க நீதிச்சேவை ஆணைக்குழுவினால் தவிசாளர் உட்பட மூன்று உறுப்பினர்களை கொண்டமைந்த நடுவர் குழுவினர் நியமிக்கப்படுவர்.

**5. தத்துவங்கள்**

அரச அலுவலர்களின் மற்றும் பொலிஸ் அலுவலர் தொடர்பாக அரசாங்கசேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் முடிபுக்கு மற்றும் கட்டளைக்கு எதிராக முன்வைக்கப்படும் ஏதேனும் மேன்முறையீட்டைக் விசாரித்து தீர்வைப் பெற்றுக்கொடுத்தல்.

**6. மேன்முறையீடொன்று முன்வைத்தல்.**

2002 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிருவாகமேன்முறையீடுகள் நியாயசபைச் சட்டத்தின் 4(1) மற்றும் 4(2) பிரகாரம் முன்வைத்தல் வேண்டும் .

**7. மேன்முறையீடொன்று முன்வைக்கப்பட்ட பின்னைய நடவடிக்கைமுறை**

அச்சட்டத்தின் 5(1) மற்றும் 5 (2) பிரிவின் பிரகாரம் முதன்மை செயற்பாடுகள் 6(அ), (ஆ), (இ), (ஈ) படி நடைமுறைப்படுத்தல்.

**8. காலவரையறை**

இச் சட்டத்தின் 7 ஆம் பிரிவில் காணப்படுவதன் பிரகாரம் மேன்முறையீடொன்று கிடைக்கப்பெற்று இரண்டு மாத காலப் பகுதிக்குள்ளாக கேட்டு இறுதியாகத் தீர்த்துவைத்தல் வேண்டும்.

**9. நியாயச் சபையின் தீர்ப்பு**

இச்சட்டத்தின் 8(1) பிரிவின் படி நடவடிக்கை செய்யப்படுவதோடு 8(2) பிரிவின் படி நியாயச்சபையின் முடிபுகள் இறதியானதும் இ முடிவானதுமாதல் வேண்டும் என்பதுடன் அது ஒரு நீதிமன்றத்தினால் ஏதேனும் வழக்கு விசாரணையின் போது கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது என்பதும் உள்ளடங்கியுள்ளது.

**10. வேலைத்திட்டம்**

இவ் நியாயச் சபைக்கு மேன்முறையீடொன்று கிடைக்கப்பெற்றதன் பின் கீழ் காணப்படும் தொடர்முறையின் கீழ் நடைமுறைப்படுத்தல் தொடர்பாக தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| i. | மேன்முறையீட்டை பதிவு செய்து திகதியை தீர்மானித்து அறிவிப்பு அனுப்புதல் மற்றும் அழைப்பது தொடர்பாக | 03 கிழமை |
| ii | அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்க்கு அனுப்பி கண்காணிப்பு அறிக்கையை பெற்றக்கொள்வதற்க்கு | 04 கிழமை |
| iii | கண்காணிப்பு அறிக்கை தொடர்பாக மேன்முறையீட்டாளரின் மறுபொழியை பெற்றுக்கொள்வதற்க்கு | 04 கிழமை |
| iv | சம்பந்தப்பட்ட மேன்முறையீடு தொடர்பாக விசாரணை தொடர்பாக | 08 கிழமை |
| v | எழுத்து மூல ஆவணத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக. | 08 கிழமை |
| vi | தீர்வைப் பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக | 04 கிழமை |
| | மேன்முறையீடு தொடர்பாக விசாரணை செய்து தீர்வைப்பெற்றுக் கொடுப்பது தொடர்பாக கூடிய பட்ச்சம் செலவலியும் காலம் | 31 கிழமை |

**11 முன்வைக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகளின் உள்ளடக்கம்**

இதுவரைக்கும் இவ் நியாயசபைக்கு கீழ் காணப்படும் விடயம் தொடர்பாக மேன்முறையீடுகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

I புதவி உயர்வு

II புதவி விலகல் / மீண்டும் சேவையில் அமர்த்துதல்

III ஒழுங்கு நடவடிக்கை கட்டளை தொடர்பான.

IV இடமாற்றம் செய்தல்

V பணி ஓய்வு பெறல் /பணி ஓய்வு செய்வது தொடர்பான.

.

Vi பணி மூப்பு இ மூத்த நிலை தொடர்பான.

**12.மேன்முறையீடுகள் தொடர்பான புள்ளிவிபரங்கள் 2013**

| | |
|---|---|
| 2014.12..31 ஆம் திகதி அன்று முன்கொணரப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 594 |
| 2015ஆம் ஆண்டினுள் கேவையிடப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 244 |
| மொத்தம் | 838 |
| 2015ஆண்டினுள் விசாரணை செய்து தீர்மானிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 166 |
| 2015 ஆம் ஆண்டு மீண்டும் அழைப்பிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | - |
| 2015ஆம் ஆண்டினுள் தீர்மானிக்கப்படாத எஞ்சிய மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 672 |

**13. 2015 ஆம் ஆண்டில் இறுதி முறையீடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிபுகள்**

| | | | |
|---|---|---|---|
| I | நிராகரிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | - | 117 |
| II | முடிபொன்று அல்லாது பிட்போடப்பட்டுள்ள மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | - | 06 |
| III | மேன்முறையீட்டில் இடம்பெற்றுள்ள நிவாரணம் பெற்றுக்கொடுக்க கூடிய மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | - | 35 |
| IV | மேன்முறையீட்டாளரால் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்ட (ரத்துசெய்யப்பட்ட) மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | - | 08 |
| V | முடிபு / தீர்ப்பு வழங்க முடியாத மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | - | - |
| | 2015 ஆம் ஆண்டு முடிபுக்கு கொணரப்பட்ட மேன்முறையீடுகள் | - | 166 |

**14. நானாவித மனுக்கள்**

மேற்காணப்படும் மேன்முறையீடுகளுக்கு பிரம்பாக அரசாங்கசேவை ஆணைக்குழுவினால் மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குவினால் முடிபு அல்லது கட்டளை இல்லாத 122 முறையீடுகள் இவ் அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள போதும் அவற்றை விசாரணை செய்யும் அல்லது தீர்வைப்பெற்றுக்கொடுக்கும் அதிகாரம் இவ் நியாய சபைக்கு இல்லாததால் அவ்வாறான முறையீடுகள் வேறாக பதில் அனுப்பப்பட்டுள்ளது.

**15. முடிபு/ தீர்ப்பு வழங்குவதில் காணப்படும் பிரச்சினை**

மேன்முறையீடொன்று கிடைக்கப்பெற்று 02 மாத கால எல்லைக்குள் இறுதி தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளப்போதும் (7ம் அத்தியாயத்தின் படி) சகல மேன்முறையீடுகளும் திறந்த நீதிமன்றத்தின் முன் அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் முன்வைக்கப்படும் நடைமுறை பிரச்சினைகள் அடிப்படையில் 7 ம் அத்தயாயத்தின் படி செயற்ப்பட இயலாத சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

உதாரணமாக மேன்முறையீட்டாளர் சார்பில் முன்வரும் சட்டத்தரணி அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழு மற்றும் அதிகாரிகள் மூலம் சாதாரண காரணங்கள் முன்வைக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவற்றிற்க்கு இடமளிக்க வேண்டியுள்ளமை.

மேற்கூறப்பட்ட விடயங்களை கவனத்தில் கொள்ளும் போது 2015 ஆம் ஆண்டில் எதிர்ப்பர்த்த இலக்கை (வழக்கை தீர்த்து வைப்பதில்) அடையமுடியாது உள்ளது.

குறிப்பு :-

இருப்பினும் முன்வைக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை அடிப்படபடையாக கொண்டு குறைந்தகால எல்லைக்குள் மேன்முறையீடுகளை மிகவிரைவில் விசாரயை செய்து தீர்வைப் பெற்றுக்கொடுக்க சகல எற்பாடுகளும் செய்யப்பட்டுய்யது.

**16. நிதி ஏற்பாடுகள் 2015**

2002.09.12 திகதி இல 402 இன் அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 2.4.2 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பின்வரும் விபரங்கள் சமர்ப்பிக்கின்றேன்.

**நிதி ஏற்பாடுகளும் செலவீனங்களும்.**

| **செலவுகளின் தன்மை** | **வருடத்திற்க்கான முழுவரவு செலவு திட்ட ஒதுக்கீட்டுப்பணம். ரூபா** | **நிலையான அனைத்து சீராக்கத்துக்கு பின்னரான ஒதுக்கீட்டுப்பணம் ரூபா** | **உண்மையான செலவீனம் 2015.12.31 ரூபா** |
|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 8,100,000 | 9,500,000 | 9,482,147 |
| பிறமீண்டெழும் செலவினம் | 9,500,000 | 13,630,000 | 13,435,145 |
| பொறிகளும் இயந்திர உபகரணங்களும் | 1,125,000 | 1,125,000 | 557,786 |
| பிறமுலதனச் சொத்துக்கள். | 75,000 | 75,000 | - |
| **மொத்தம்** | **18,800,000** | **24,330,000** | **23,475,078** |

முற்கொடுப்பனவு“பீ”கணக்கு தொடர்பாக குறித்துரைக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கமைவாக வரவுசெலவுதிட்டம் 2015 ம் ஆண்டு.

| | அதிகபட்ச்சசெலவுகள் | குறைந்தப்பட்ச்சவரவு | சமநிலைதொகையில் அதிகபட்ச்ச எல்லை |
|---|---|---|---|
| வரவுசெலவுத்திட்டபணம் | 1,170,000 | 355,000 | 2,800,000 |
| உண்மையானசெலவீனம் | 645,954 | 732,764 | 1,370,675 |

**17. பணியாட்கள்**

| **பணியாட்கள்** | **அனுமதிக்கப்பட்ட பணியாட்கள் தொகை** | **உண்மையான பணியாட்கள் தொகை** | **வெற்றிட தொகை** |
|---|---|---|---|
| **i .** மூப்பு நிலை | 02 | 02 | - |
| **ii** மூன்றாம் நிலை | - | - | - |
| **iii** உயர் நிலை | 12 | 12 | - |
| **iv** தொடக்க நிலை | 04 | 04 | - |
| **மொத்தம்** | **18** | **18** | **-** |

**18. <u>நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை காரியாலயம்</u>**

தற்போது இவ் நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபை அலுவலகமானது. இல 35, சில்வா ஒழுங்கை, ராஜகிரிய. எனும் முகவரியில் அமைந்துள்ளது. தொலைப்பேசி இல:- 011-2877685 ஆகும்.

-----------------------------------------------------